

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக, ரூ.3 கோடி மதிப்பில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், ரூ.4 கோடியே 52 இலட்சத்து 83 ஆயிரம் மதிப்பில் புதிய திட்டப்பணிகள் துவக்கி வைத்து, ரூ.28 இலட்சத்து 52 ஆயிரம் மதிப்பில் முடிவுற்ற திட்டப் பணிகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் மற்றும் மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.முருகன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் என். கௌதமன் முன்னிலை!

# திருமருகல் ஒன்றியத்தில் ரூ 1.05 கோடி மதிப்பில் 5 புதிய கட்டிடங்கள்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

### ப.செல்வம்–ஆரூர்.மணிவண்ணன்–ஆர்.டி.எஸ்.சரவணன்–செல்வ.செங்குட்டுவன் பங்கேற்பு!

நாகை, பிப். 20 -

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றிய பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ரூ.1.05 கோடி மதிப்பில் 5 கட்டடங்களை நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்.

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றிய பகுதிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்வேறு கட்டடங்களை திறப்பு விழா நடைபெற்றது. திறப்பு விழாகளுக்கு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகாஷ் தலைமை தாங்கினார். நாகை மாவட்டச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என். கௌதமன் நாகை சட்டமன்ற உறுப்பினர் முகம்மது ஷா நவாஸ் ஆகியோர் முன்னிலை வைத்தார்.

நிகழ்ச்சிகளில் திருமருகல் ஊராட்சி ஒன்றியம் வாழ்குடி ஊராட்சி தண்ணீர்பந்தல் கிராமத்தில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழலக கட்டடத்தினையும், கோட்டூர் ஊராட்சி சடகோபன்மூலை கிராமத்தில் ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டடத்தினையும், திருப்புகலூர் ஊராட்சி வவ்வாலடி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில்; ரூ.32.80 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டடத்தினையும், அகரகொந்தகை ஊராட்சி வாழ்மங்கலம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.46.40 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டடத்தினையும், உத்தமசோழபுரம் ஊராட்சி பூதங்குடி கிராமத்தில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழலக கட்டடத்தினை நாகூரில் ரூ.10.86 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழலக கட்டடம் உள்ளிட்ட கட்டடங்களையும் மாவட்டப் பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தாட்கோ தலைவர் உமதிவாணன், மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம், மாவட்ட துணை செயலாளர் ஆரூர் மணிவண்ணன், தலைமைச் செயற் குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், க.மறைமலை, நாகை நகர கழக செயலாளர், நகரமன்ற தலைவர் இரா.மாரிமுத்து, ஒன்றிய கழக செயலாளர்கள் செல்வ.செங்குட்டுவன் ஆர்.டி.எஸ்.சரவணன், நாகூர் நகர கழக செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் எல்.எஸ்.ஈ.பழனியப்பன், முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.இளஞ்செழியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி, இளம் சுந்தர், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஜெபகர் சாதிக், கார்த்திகேசன், சேகர் ஜெயலட்சுமி, செந்தில்நாதன், அமீர் ஜெகபர், ப தமிழ்செல்வன், கலைச்செல்வி, திருமருகல் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் ஜெயக்குமார், குமரவேல், ஜெயபால், செந்தில்குமார், சுமதி, திருமருகல் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் துரையரசன், ஜெகபர்அலி, சோமு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் குடவாசலில் நடைபெற்ற தெருமுனைப் பிரச்சாரக் கூட்டத்தில் மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஆடுதுறை உத்திராபதி பேசினார். ஒன்றியச் செயலாளர் பா.பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் சோம. இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.முருகேசன், நகர்மன்ற துணை தலைவர் குணசேகரன், இலக்கிய அணி அமைப்பாளர்கள் எண்கண்.சா.மணி, ஜாகிர் உசேன், தங்க குணசேகரன், செல்லத்துரை, பாலமுத்து உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பத்தூர் டாக்டர் எம். கிருஷ்ணன்
### பிப்ரவரி 20 (1994)



சுயமரியாதை இயக்கத்தின் சென்னை மாவட்ட இணைச் செயலாளராக பணியாற்றியவர்.

1.4.1945ல் சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட 14வது திராவிடர் (ஜஸ்டிஸ்) மாநாட்டுச் செயலாளராக பணிபுரிந்தவர்.

1948ஆம் ஆண்டு பெரியார் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு – கருப்புச் சட்டை போரிலும், 1953ல் நடைபெற்ற குலக் கல்வி எதிர்ப்புப் போரிலும் பங்கேற்றவர்.

1971ல் நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது கழக துணை ஆய்வுக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டவர்.

தந்தை பெரியார், பேறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### சிந்தனைச் சிற்பி

## சிங்காரவேலர் பிறந்தநாள் விழா!

சென்னை, பிப். 20 -

தமிழ்நாடு அரசின் சார்பில், சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் அவர்களின் 166-வது பிறந்த நாளையொட்டி 18.2.2025 அன்று, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அன்னாரின் திருவுருவப் படத்திற்கு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன் உள்பட அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கிருஷ்ணகிரி, பிப். 20 -

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் அ.யுவராஜ் தலைமையில் நாளை (21.02.2025 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் ஒசூர் தளி சாலை ஆனந்த் கிராண்ட் பேலஸ் திருமண மண்டபத்தில் செயற்குழுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இதில் மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்கள், நிர்வாகிகள், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு செயலா ளர்கள், கிளை செயலாளர்கள், BLA2, BLC, கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

1. மார்ச் 1ம் தேதி கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் குறித்து.
2. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.





புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கொத்தக்கோட்டை ஊராட்சி, தோப்புப்பட்டி வீரமகாளியம்மன் கோவில் அருகில், புதிதாக கட்டப்பட்டுள்ள கலையரங்கம் கட்டடத்தினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (18.02.2025) திறந்து வைத்தார். உடன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### எட்டாம் ஆண்டு
## நினைவு அஞ்சலி

மறைவு : 20.02.2017



## K.P.K.தங்கவேலு

முன்னாள் மாவட்ட கழக செயலாளர், புதுக்கோட்டை தெற்கு
முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர்

.............. நீங்காத நினைவுகளுடன் ..............

**K.P.K.T.தங்கமணி**
ஒன்றிய கழக செயலாளர், திருவரங்குளம் (மேற்கு)

**K.P.K.T.T.வள்ளியம்மை தங்கமணி**
முன்னாள் ஒன்றியப்பெருந்தலைவர்

**K.P.K.குடும்பத்தினர்கள், பாத்தம்பட்டி.**